மேனிலை இரண்டாம் ஆண்டு

அறவியல்

மாதிரி வினாத்தாள் – 3

நேரம் : 2.30 மணி　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண்: 90

பிரிவு – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையைத் தேர்ந்தெடு: (20x1=20)

1. சிந்துசமவெளி மக்கள், திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறியவர்

(அ) டாக்டர் குகா　　　(ஆ) சர்.ஜான். மார்ஷல்

(இ) கார்டன் சில்டே　　　(ஈ) ராலதாஸ் பானர்ஜி

2. இசை, நடனம், ஆகிய நுண்கலைகளை விவரிப்பது

(அ) ஆயுர்வேதம்　　　(ஆ) தனுர் வேதம்

(இ) தானியம்　　　(ஈ) காந்தர்வ வேதம்

3. தினை என்பது

(அ) நடத்தை　　　(ஆ) பழக்கம்

(இ) தானியம்　　　(ஈ) ஒழுக்கம்

4. ஆயுர் வேதம் என்ற நூலின் ஆசிரியர்

(அ) ஹர்ஷர்　　　(ஆ) அசுவகோஷர்

(இ) நாகார் ஜீனர்　　　(ஈ) திருமூலர்

5. ஓதுதல், வேட்டல், ஈதல், போர்புரிந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற தொழில்களைச் செய்துவந்தவர்கள்

(அ) பிராமணர்கள்　　　(ஆ) ஷத்திரியர்கள்

(இ) வைசியர்கள்　　　(ஈ) சூத்திரர்கள்

6. இசையும் நடனமும் செழித்தோங்கியவர்களின் காலம்

(அ) மௌரியர்கள் காலம்　　　(ஆ) குப்தர்கள் காலம்

(இ) முகலாயர்கள் காலம்　　　(ஈ) ஆங்கிலேயர்கள் காலம்

7. சைவத்திருமுறைகள பன்னிரண்டினையும் தொகுத்தளித்தவர்

(அ) நம்பியாண்டார் நம்பி (ஆ) புகழேந்திப் புலவர்

(இ) ஒட்டக் கூத்தர் (ஈ) ஜெயங்கொண்டார்

8. ‘‘வாழ்வு ஒரு விளையாட்டு வீரதீரச் செயல் ஆனால் அது போராட்டமன்று ஏற்றமிக்க கதையுமன்று’’ எனக் கூறியவர்

(அ) பசவர் (ஆ) ஏகநாதர்

(இ) சூரதாசர் (ஈ) ஜெயங்கொண்டார்

9. சூழ்நிலையால் மனிதன் உருவாக்கப்படுகிறான் தீய சூழ்நிலையில் வாழ்ந்தவன் நல்ல சூழலை நாடி வரும்போது முன்பு அவனிடமிருந்த தீய பழக்க வழக்கங்கள் நீங்கிவிடுகின்றன எனக் கூறியவர்

(அ) நம்மாழ்வர் (ஆ) பெரியாழ்வர்

(இ) ஆண்டாள் (ஈ) பேயாழ்வார்

10. ‘‘இந்தியா ஒரு குழந்தையன்று அது பொறுப்பற்ற மனிதர்களைக் கொண்டது. அதற்குச் சுதந்திரம் வழங்க வேண்டும்’’ என முழக்கமிட்டவர்

(அ) காந்தியடிகள் (ஆ) அன்னிபெசன்ட்

(இ) பாலகங்காதர திலகர் (ஈ) மகாகவி பாரதி

11. சிந்தனை, சொல், செயல் இம்மூன்றாலும் உலகில் வாழும் எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாமல் இருப்பது

(அ) சத்தியம் (ஆ) அஹிம்சை

(இ) சர்சோதயம் (ஈ) ஒழுக்கம்

12. இம்மைக்கும், மறுமைக்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் தருபவை உபநிடதங்கள் எனக் கூறியவர்

(அ) எமர்சன் (ஆ) தோரோ

(இ) கதேஸ்கோப்பளார் (ஈ) வால்ட் விட்மென்

13. கடல் மகள் என்று அழைக்கப்படுபவர்

(அ) சரஸ்வதி (ஆ) இலக்குமி

(இ) மீனாட்சி (ஈ) பார்வதி

14. ஒவ்வொரு குடும்பத்தின் மூத்தவன் ________ என்று அழைக்கப்பட்டான்

(அ) கிருஹபதி (ஆ) கிராமணி

(இ) நிஷ்கா (ஈ) நிவி

15. பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நாடகம்________

(அ) பவளக்கொடி (ஆ) வள்ளித்திருமணம்

(இ) சபாபதி (ஈ) பெண்டிர்

16. ஜீவன், அஜீவன் என்பதன் பொருள்________

(அ) உயிர் ஏற்றவை, தீவினை (ஆ) நல்வினை,தீவினை

(இ) தீவினை, உயிர் உள்ளவை (ஈ) உயிர் உள்ளவை, உயிரற்றவை

17. திருவேணி சங்கமம் என்பது________

(அ) கங்கை, யமுனை, காவேரி (ஆ) கங்கை, காவேரி, கோதாவரி

(இ) கங்கை, யமுனை, சரஸ்வதி (ஈ) கங்கை, காவேரி, யமுனை

18. சமண தீர்த்தங்கரர்களின் எண்ணிக்கை

(அ) இருபத்தி ஒன்று (ஆ) இருபத்திரண்டு

(இ) இருபத்தி மூன்று (ஈ) இருபத்தி நான்கு

19. மயிர் நீப்பின் உயிர் வாழாக்கவரிமான் போன்று தமிழர் உயிரினும் மேலானதாகப் போற்றப்படுவது

(அ) நட்பு (ஆ) வீரம்

(இ) மானம் (ஈ) கற்பு

20. ‘‘சங்கத் தமிழ் மூன்றும் தா! என்று வேண்டியவர்

(அ) ஔவையார் (ஆ) கணியன் பூங்குன்றனார்

(இ) திரிகூடராசப்ப கவிராயர் (ஈ) பாரதியார்

## பிரிவு – II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்

21– வது வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும் (7x2=14)

21. பண்பாடு –பற்றி தமிழறிஞர் கூறும் கருத்து யாது ?

22. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் எவ்வாறு ஒற்றுமைக்கு துணை புரிகின்றன ?

23. சிந்துசமவெளி நாகரிகத்தின் அழிவு பற்றி எழுது

24. உபவேதங்கள் நான்கு யாவை ?

25 சரியாக பொருத்துக

அ) சிட்சை – எனப்படும் இலக்கம்

ஆ) நிருத்தம் – எனப்படும் வானநூல்

இ) ஜோதிடம் – எனப்படும் சொல்லாக்க விளக்கம்

ஈ) கல்பம் – எனப்படும் ஒலியியல்

26. ‘இதிகாசம்’ என்பதன் பொருள் யாது ?

27. தீர்த்தங்காரர்கள் என்பவர் யார் ?

28. ‘நகரகர்’ சிறு குறிப்பு தருக

29. இராமனுஜரின் கோட்பாட்டையும், தத்துவத்தையும் எழுது

30. யிகோலஜி என்றால் என்ன ?

## பிரிவு – II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்

39 –வது வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும் (7x3=21)

31. பண்பாட்டுக் கல்வியின் பயன்கள் மூன்றை விவரி

32. சிந்துவெளி மக்கள் இந்தியப் பண்பாட்டிற்ககு அளித்த ‘கொடையினை’ விவரி

33. முற்கால வேதகாலத் தொழில் வணிகம் பற்றி குறிப்பு வரைக

34. ‘உபநயனம்’ ‘குருகுல வாசம்’ பற்றி எழுதுக

35. ‘கல்லும் கவிபாடும்’ சோழர்காலச் சிற்பங்களில் இருந்து நீவீர் அறிவன யாவை ?

36. கிறித்துவ சமயத்தின் கோட்பாடுகள் யாவை ?

37. விவேகானந்தரின் பொன்மொழிகள் ஏதேனும் 3 எழுதுக. அதை எவ்வாறு வாழ்வில் கடைபிடிப்பாய் ?

38. இந்தியா தரும பூமி என அழைக்கப்பெறுவதேன் ?

39. சுற்றுச் சூழலைப்பேணுவதில் மாணவர்களின் பங்கைக் குறிப்பிடுக.

40. நாடக உலகின் ஜாம்பவான்கள் யார் ? ஏன் ?

பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (7x5=35)

41. பண்பாடு – நாகரிகம் விவரி

(அல்லது)

புராணங்கள் பற்றி விவரி

42. சிந்து நாகரிக சமயம் மற்றும் அதன் எழுத்துக்கள் பற்றியும் விவரிக்கவும்.

(அல்லது)

தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளை விவரி

43. நாயன்மார்களின் சமயத் தொண்டுகளை விவரித்து எழுதுக

(அல்லது)

இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் எழுதுக

44. பிற்காலப் பாண்டியர் பண்பாடுகளை விவரிக்க.

(அல்லது)

பிரம்ம சமாஜம் – விவரிக்க.

45. சுற்றுப்புறச் சூழல் கல்வியின் மூலம் மக்களுக்கு எவ்வாறு கருத்துகளை எடுத்துக் கூறுவாய் ?

(அல்லது)

இந்திய விடுதலையும் மகாத்மாவும் – விவரி

46. ‘இசைத்தமிழ்’ பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை மற்றும் கலை அம்சங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

**47.** இந்து சமயக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை விவரி.

(அல்லது)

சீர்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களையும், விளைவுகளையும் அதன் காரணிகளையும் தொகுத்து எழுதுக.